T.C.019

**001/DM/26**

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## SECOND CLASS LANGUAGE TEST — PART – A
## WRITTEN EXAMINATION (TRANSLATION, COMPOSITION, LETTER WRITING AND LANGUAGE SKILLS)

(Without Books)

Maximum Time : 2.30 hours | Maximum Marks : 100

1. **அனைத்து வினாக்களுக்கும் விடையளி.**

2. **வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டது.**

3. **கையெழுத்துத் தெளிவாகவும், விடைகள் குறித்த அளவினதாகவும் இருத்தல் வேண்டும்.**

### பகுதி — I

1. ஆங்கிலப் பத்தியைத் தமிழாக்கம் செய்க. (1 × 10 = 10)

The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers' fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

கீழ்க்காணும் தலைப்புகள் ஒவ்வொன்றிற்கும் 150 வார்த்தைகளுக்கு மிகாமல் கட்டுரை எழுதுக. (2 × 15 = 30)

2. சுற்றுச்சூழல் பாதுகாப்பு.

3. சான்றோர் வளர்த்த தமிழ்.

4. அலுவலக உதவியாளர் பணிக்கு விண்ணப்பிக்க, தன் விவரப்பட்டியல் தயாரித்து விண்ணப்பம் ஒன்று எழுதுக. (1 × 10 = 10)

**[Turn over**

## பகுதி — II

5. பின்வரும் பத்தியைப் படித்து வினாவிற்கேற்ற விடையளிக்கவும். $(5 \times 1 = 5)$

வாய்மையைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் பேசுகின்றன. வாய்மை பேசும் நாவே உண்மையான 'நா' என்ற கருத்தை "பொய்யாச் செந்நா", "பொய்படுபறியா வயங்கு செந்நா" என்று இலக்கியங்கள் கூறுகின்றன. நாக்கு ஓர் அதிசயத் திறவுக்கோல் என்பார்கள். இன்பத்தின் கதவைத் திறப்பதும் அதுதான். துன்பத்தின் கதவைத் திறப்பதுவும் அதுதான். மெய் பேசும் 'நா' மனிதனை உயர்த்துகிறது. பொய் பேசும் 'நா' மனிதனைத் தாழ்த்துகிறது.

(i) எதனைச் சிறந்த அறம் என்று சங்க இலக்கியங்கள் பேசுகின்றன?

(ii) அதிசயத் திறவுக்கோல் எது?

(iii) மனிதனை உயர்த்துவது எது?

(iv) மனிதனைத் தாழ்த்துவது எது?

(v) உண்மையான நாவை இலக்கியங்கள் எவ்வாறு கூறுகின்றன?

6. கொடுக்கப்பட்டுள்ள சூழ்நிலைக்கு ஏற்ப உரையாடலை நிறைவு செய்க. $(1 \times 5 = 5)$

அண்ணன் : தம்பீ! எங்கே சென்றாய்?

தம்பி : _____

அண்ணன் : கடைக்கா! _____ வாங்கி வந்தாய்?

தம்பி : தொல்காப்பியர் எழுதிய இலக்கண நூல் வாங்கி வந்தேன்.

அண்ணன் : _____?

தம்பி : ஐந்நூறு ரூபாய்.

அண்ணன் : எப்படிக் கொண்டு செல்வாய்?

தம்பி : _____ வைத்துத் தூக்கிச் செல்வேன்.

## பகுதி — III

மொழிப்பயிற்சி

பின்வரும் வினாக்களுக்கு விடையளி : $(40 \times 1 = 40)$

7. 1560 என்ற எண்ணை எழுத்தால் எழுதுக.

8. 'மலை' என்ற சொல்லைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.

9. Modern Literature – கலைச்சொல் தருக.

10. தமிழ் மாதங்களில் முதல் மாதத்தின் பெயர் என்ன?

11. சார்பெழுத்து எத்தனை வகைப்படும்?

12. விடுபட்ட எழுத்துகளை எழுதுக.

செ__வ__தி

13. உரிய நிறுத்தற் குறியிடுக.

ஆகா என்ன சுகம் தெரியுமா

14. கீழ்க்கண்ட பட்டப்படிப்புப் பெயரைத் தமிழில் எழுதுக.

B.Com.

15. மரம், நத்தை, விலங்கு, மனிதன் இவற்றில் ஐந்தறிவு உயிரினம் எது?

16. நெடில் எழுத்துகளைக் கண்டறிந்து எழுதுக.

வாக்கினிலே இனிமை வேண்டும்.

17. பிழை திருத்தி எழுதுக.

காகம் கத்தும்.

18. விடைக்கேற்ற வினா அமைத்து எழுதுக.

பூவின் தோற்றநிலை அரும்பு எனப்படும்.

19. வினைச் சொல்லை எடுத்து எழுதுக.

மலர்விழி எழுதினாள்.

20. சொல்லின் இடையில் ஓர் எழுத்தைச் சேர்த்துப் புதிய சொல்லை உருவாக்குக.

கதை

21. குறில் எழுத்துகளைக் கண்டறிந்து எழுதுக.

அரவிந்தன்

22. இருபொருள் தருக.

ஆழி

23. சரியான மரபுச்சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

பால் _____ (குடி, பருகு)

24. கலைச்சொல்லைத் தமிழாக்கம் செய்க.

Vowel

25. வல்லமை என்ற சொல்லின் பொருள் என்ன?

26. பொருந்தாத சொல்லை எடுத்து எழுதுக.

அரசு, எய்து, மூழ்கு, நீந்து.

27. பழமொழியை நிறைவு செய்க.

ஆற்றில் போட்டாலும் _____

28. பிழையைத் திருத்திச் சரியாக எழுதுக.

மேகங்கள் சூழ்ந்து கொண்டது.

29. வினைமுற்றுக்கு உரிய வேர்ச் சொல்லை எழுதுக.

நடக்கிறது.

30. சரியானதை எடுத்து எழுதுக.

கல்லணை அமைந்துள்ள மாவட்டம் _____ (திருச்சி/தஞ்சாவூர்)

31. கலைந்துள்ள எழுத்துகளை முறைப்படுத்துக.

விகண்லம்

32. கீழ்க்காணும் சொல்லில் உள்ள எழுத்துகளைக் கொண்டு புதிய சொற்களை உருவாக்குக.

கரும்பு

33. தொகைச் சொற்களை விரித்து எழுதுக.

நாற்றிசை

34. "நாள்தோறும்" - சொற்றொடரில் அமைத்து எழுதுக.

35. பிறமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல்லை எழுதுக.

கோல்டு பிஸ்கட்.

பொருத்துக – யாருக்கு எது கடினம் இல்லை?

36. பறவை – காட்டின் இருட்டு

37. கரடி – கற்றுக் கொள்ளுதல்

38. மீன் – வானத்தின் தொலைவு

39. குழந்தைகள் – கடலின் ஆழம்

40. மீண்டும் மீண்டும் வந்தார் – எவ்வகைத் தொடர்?

41. பிரித்து எழுதுக.

தேனிசை

42. விடுபட்ட எழுத்துகளை நிரப்புக.

இ__கு

43. உலகம் எவற்றால் ஆனது?

44. திரை என்னும் சொல்லின் பொருள் _____

45. ஆறு + சுவை சேர்த்து எழுதுக.

46. உலகப் பொதுமறை எனப் போற்றப்படும் நூல் எது?